# அருள் ராஜயோகம்

Volume-12 Issue-03 September-2025
Price Rs. 25
மலர் –12 இதழ் – 03 செப்–2025

★ ஆன்மீகம் ★ ஜோதிடம் ★ மருத்துவம் ★ மாதஇதழ்



SRJ "ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)

## நவராத்திரி சிறப்பிதழ்

"ஒரு மனிதனை யார் கைவிட்டாலும்
ஆன்மீகம் கைவிடாது!"

– Dr. K.ராம் Ph.D., (USA)

இம்மாத வெளியீடு

# இப்போது விற்பனையில்..!




ஓர் ஆண்டின் 366 நாட்களுக்குரிய திருத்தலங்களின் ஸ்தல வரலாறுகள், ஸ்தல பரிகார குறிப்புகள், ஸ்தலத்திற்கு உரிய மந்திரங்கள், ஸ்தலத்தின் பூஜைக்குரிய விளக்கங்கள், ஸ்தல அமைவிடம், வழித்தடங்கள் அத்தனையும் தாங்கி அரிய படைப்பாக போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இதுவே!

தவற விடாதீர்கள்..!

இன்றே வாங்குங்கள்..!

நமது பதிப்புகள் அனைத்தும் கிடைக்கும் இடங்கள்

Publishers:

**APSARA PUBLICATIONS**, # 18/67, P.V.Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014
Phone: 044- 2811 6770 | Cell: 72999 21880 / 88386 38900
E-mail: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com

**விஜயா பதிப்பகம்**
20, இராஜ வீதி, டவுன் ஹால், கோவை -1. போன்: 0422- 2394614, 2382614, செல்: 90470 87058
மற்றும் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்

**ஸ்ரீ தயவு சித்தாஸ்ரமம்** திருவண்ணாமலை - 606 603. செல்: 99448 00220

அருள் ராஜயோகம்
Volume-12 Issue-3 September2025
மலர் – 12 இதழ் – 3 செப்–2025
●ஆன்மிகம் ●ஜோதிடம் ●மருத்துவம் ●மாதஇதழ்

அன்புள்ளம் கொண்ட வாசக- வாசகியர்களுக்கு

ஆழமான ஆன்மீகத்தையும் அறியவேண்டிய சாஸ்திரத்தையும் அற்புதமான மனோதிடத்தையும் வாரி வழங்கும் அருள் ராஜ யோகம் என்ற அற்புதமான ஆன்மீக மாத இதழை பார்க்கக்கூடிய படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்த பாக்கியவான்களாகிய உங்களுக்கு குலதெய்வ ஆசியும் நவகிரக அனுகிரகமும் முழுமையாக கிடைக்கவும் நாளும் பொழுதும் நன்மைகள் பெருகவும் உண்மையாக பிரார்த்திக்கின்றேன்

அம்பிகையை ஒன்பது இரவுகள் போற்றி வழிபடுவதையே நவராத்திரி என்கின்றோம். முப்பெரும் தேவியரின் 9 ரூபங்களை, ஒவ்வொரு இரவிலும் பெண்கள் வழிபடுவதோடு, கொலு வைத்து, அதனைக் காண வருபவர்களுக்கு, வெத்தலை பாக்கு தாம்பூலம் எனத் தந்து தங்களது மாங்கல்ய பலத்தைப் பெருகச் செய்வது இந்தநாட்களில் தான். அதனாலேயே இம்மாத இதழை நவராத்திரி சிறப்பிதழாகத் தயாரித்து வழங்கியுள்ளோம்.

"நவராத்திரி - சிறப்பிதழ்" என உருவாக்கி வழங்குகின்றோம். அவை தொடர்பான கட்டுரைகளே இந்த இதழை அலங்கரிக்கின்றன. ராசி ரத்தினங்கள் அணிவது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கிற சிறப்புக் கட்டுரையும் வழங்கி உள்ளோம். அனைத்தும் உங்களுக்கு நிச்சயம் பயன்தரும் என நம்புகின்றோம்.

நெஞ்சிற்கினிய நேயர்களே!

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்ற என்னுடைய ஆழமான ஆன்மிகத்தையும் பதிவு செய்து அகில உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களின் அனுக்கிரகமும் ஈரேழு உலகத்தின் உள்ள எல்லா சக்திகளின் ஒட்டுமொத்த ஆசிர்வாதமும், உங்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும் வாழ்த்துக்களோடும்.






**ஆசிரியர்**
**S R J “ராஜயோகம்”**
**Dr. K.ராம் Ph.D., (USA)**



சிறப்புக் கட்டுரை:

# லக்கினத்தில் சுக்கிரன் இருந்தால் ஆதீர்ஷ்டமா!

உலகெங்கிலும் உள்ள அருள் ராஜயோகம் வாசகர்களுக்கு எனது தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.இந்தக்கட்டுரையில் நாம் பார்க்கப் போவது, ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தில் சுக்கிரன் இருந்தால் என்னென்ன பலன்கள் ஏற்படும் என்பது பற்றிய விரிவான விளக்கங்களைத் தான்.லக்கினத்தில் எந்த கிரகம் இருந்தால், எந்த மாதிரியான பலாபலன்கள், எந்த மாதிரியான யோகங்கள், எந்த மாதிரியான ஆயுள் தீர்க்கம் என்பது போன்ற பல விஷயங்களை டிவி நிகழ்ச்சிகளில் தெளிவாகவே சொல்லி இருந்தோம். நமது யூடியூப் சேனலில் கூட, அதாவது யூடியூப்ல ராஜயோகம் டிவி யில், இந்த மாதிரி நிறைய விஷயங்களை சொல்லியிருக்கிறோம். அதைப் பாருங்கள் என்று சொல்லி இருந்தோம். அதில் நிறைய விஷயங்களைப் பார்த்துப் பாராட்டி, நிறைய பேர் நன்றி சொல்லி இருக்கிறீர்கள். நானும் திரும்பவும் இந்தக்கட்டுரை மூலமாக உங்களுக்கு மனதார நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



*நிறையப் பேர் நம்மிடம் கேட்டு இருப்பது, சுக்கிர பகவான் ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தில் இருந்தால் எந்த மாதிரியான யோகம் என்று கேட்கும் பொழுதே நீங்கள் ரொம்பவும் எதிர்பார்ப்போடு ஆசையோடு கேட்டு இருப்பது தெரிகிறது. கண்டிப்பாக அதாவது இருக்கிற நவக் கிரகங்களிலேயே மிகப்பெரிய சுகபோகங்களை அருளக்கூடிய பாக்கியம் இந்த சுக்கிர பகவானுக்கு உள்ளது. சாதாரணமாக ஒருவர் திடீர் எனப் பணக்காரர் ஆகிறார் என்பதும், வெள்ளையும் சொள்ளையுமாக தொல்லை இல்லாமல் வாழ்ந்தார் என்கிறார்களே அவருக்கு இது சுக்கிர*

தசை அடித்துள்ளது என்று கூறப்படுவதை, சாதாரணமாகவே நிறைய பேர் சொல்லக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். சாஸ்திர ரீதியாகவே ஆடம்பரத்துக்கு அதிபதி ஆகவும், சுகபோகத்திற்கு அதிபதி ஆகவும், அதேசமயம் செல்வத்துக்கு அதிபதி ஆகவும் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு சுக்ர பகவானுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

வாழும் காலத்திலேயே ஒருவருடைய ஜாதகத்தில் லக்னத்தில் குருபகவான் இருந்து அந்த குருபகவான் ஆட்சியாகவோ அல்லது உச்சமாகவோ அல்லது நட்பாகவோ அல்லது குரு பகவானுடைய பார்வை இருந்தால், குரு பகவானுடைய பார்வை கிடைத்தது என்போம். அப்ப தேவ குருவாக இருந்த குருபகவான் அசுர குருவாக இருக்க கூடியவர் இந்த சுக்கிர பகவான். குரு, தேவகுரு சம்பந்தப்பட்டது என்றால், ஆச்சரியப்படும்படி யான வளர்ச்சி. அந்த வளர்ச்சியை மகிழ்ச்சியாக கொடுக்கக்கூடிய அமைப்பு இந்த சுக்ர பகவானுக்கு உண்டான சிறப்பு.

அந்த மாதிரி ஒருவருடைய ஜாதகத்தில் லக்னத்தில் சுக்கிர பகவான் அமர்ந்து அந்த லக்னம் ஆட்சியாகவோ உச்சமாகவோ இருந்தது என்றால் குரு பகவானுடைய அனுக்கிரக பார்வை இருந்தது என்றால், அந்த ஜாதகர் வாழும் காலத்திலேயே சொர்க்கம் என்கிற விஷயத்தை அனுபவிக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய பாக்கியத்தை இந்த சுக்கிர பகவான் கொடுக்கிறார். அதாவது நம் வாழ்க்கை நல்ல முறையில் இருக்கும்.நமது மறைவுக்குப் பின், மரணத்துக்கு பின் சொர்க்கத்துக்குப் போகலாம் என்று தாத்தா பாட்டி சொல்லி இருப்பார்கள். ஆனால் வாழும் காலத்திலேயே அந்த சொர்க்கத்தில் இருக்கக் கூடிய சுக போகங்களைக் கொடுக்கக்கூடிய அருளக்கூடிய அமைப்பு இந்த சுக்கிர பகவானுக்குண்டான மிகப் பெரிய சிறப்பாக இருந்து கொண்டு உள்ளது. அந்த சுக்கிரபகவான் உங்களுடைய ஜாதகத்தில் லக்னத்தில் இருப்பது, ஓரளவாவது சுக போகங்களை கொடுப்பார் எனப்படுகிறது.

இன்றைக்கு உபயோகத்துக்கு . இரண்டு சக்கர வாகனமோ, நான்கு சக்கர வாகனமோ ஒரு முக்கியமான விஷயமாகக் கருதப்படுகிறது. எல்லோருக்கும் ஏதாவது ஒன்று இருக்கிறது. அப்படி இருக்கக் கூடிய அந்த இரண்டு சக்கர வாகனம் கூட உங்களுக்கு ஆடம்பரமாக அமையக்கூடிய அல்லது இரண்டு சக்கர வாகனங்கள் வைத்து இருந்தீர்களே, நான்கு சக்கர



வாகனம் வாங்கக்கூடிய அதாவது கார் வாங்க கூடிய மிகப்பெரிய பாக்கியத்தை, அந்தக் கார் கூட, மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படும்படி ஒரு அதிசயமான, ஒரு அழகான அதாவது மிகப்பெரிய ஆடம்பரமான கார் வாங்கக் கூடிய அந்த வாகன யோகத்தை கொடுக்கக்கூடிய அருளக்கூடிய அமைப்பு இந்த சுக்கிர பகவானுக்கு உண்டான சிறப்பானது ஆகும். சாதாரணமாக ஜாதகம் பார்க்க வருகிறவர்கள் நிறைய பேரு கேட்பது, பொதுவாக நிகழ்ச்சியைப் பார்க்கிறேன். நிறைய பேரைத் தூக்கம் இல்லாமல் செய்யக்கூடிய விஷயம் ஒரு சொந்த வீடு அமையுமா? என்கிற கேள்விதான்.

அந்த மாதிரி சொந்த வீடு அமையுமா என்று கேள்வி கேட்கக் கூடிய உங்களுடைய வாழ்க்கையில், மிகப்பெரிய ஆடம்பரமான பங்களா அமையுமா என்று கேட்பதைவிட ஒரு பங்களாவாக அமையக்கூடிய வீட்டை நாம் கட்டினால் போதும் என்று கடனை வாங்கி வீடுகட்ட ஆரம்பித்தால், அது ஒரு மிகப் பெரிய

பங்களாவாக மாறக்கூடிய ஒரு சூழலை ஒரு அற்புதத்தை அந்த மாதிரியான யோகத்தை அருளக்கூடிய அமைப்பு இந்த சுக்கிர பகவானுக்குரிய மிகப்பெரிய சிறப்பாக இருந்து கொண்டு இருக்கிறது என்பதை யாருமே மறந்திட வேண்டாம்.

இந்த உலகத்தில் கார் இருக்கலாம். பணம் இருக்கலாம். வண்டி இருக்கலாம். வாகனம் இருக்கலாம். சொத்து இருக்கு. என்ன இருந்தாலும் அதையெல்லாம் அனுபவிக்கக்கூடிய ஒரு பாக்கியம் தேவை இல்லையா? எவ்வளவு சொத்து இருந்தாலும், அந்த சொத்தை அனுபவிக்கக்கூடிய ஒரு யோகம் வேணும். அதற்கு கண்டிப்பாக இந்த சுக்கிர பகவானுடைய அனுக்கிரகம் இருக்கனும். பொதுவாக, பல லட்சம், பல கோடிகள் செலவு செய்து கார் வாங்கினால் கூட, அதில் பல லட்சங்கள் செலவு செய்து, அதாவது ஆடம்பரமான அந்த பாட்டு கேட்கக்கூடிய மியூசிக் சிஸ்டம் இருந்தாலும் கூட அதில் வந்து சுகம் என்கிற ஒரு யோகம் உங்க ஜாதகத்தில் இருந்தது என்றால் தான் இந்த மாதிரி விஷயங்களை அனுபவிக்க முடியும்.

மியூசிக் சிஸ்டம் வைத்து இருக்கலாம். ஆனால் அதை பரிபூரணமாகக் கேட்க முடியாமல் உங்கள் பணியாள் அதாவது உங்களிடம் வேலை செய்யக்கூடிய ஓட்டுனர் அந்த டிரைவர் தான் வந்து இதை எல்லா அனுபவிக்க முடியும். நிம்மதியாகப் பாட்டு கேட்க முடியும். நமக்கு பாட்டு ஓடினாலும், நம் சிந்தனைகள் பல வகையில் இருக்கும். ஏன் என்று கேட்டால், இந்த மாதிரி பணமும், செல்வமும் மற்ற விஷயங்களும் வந்தாலும், பணத்திற்கு மேலான பணம் என்ற மூன்றெழுத்துக்கு மேல் சுகம் என்ற சுருக்கத்தை கொடுக்க க்கூடிய அமைப்பு இந்த சுக்கிர பகவானுக்கு மட்டும் தான் இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அந்த மாதிரி லக்னத்தில் சுக்ர பகவான் உள்ளவர்கள் வழிபட வேண்டியது பெண் தெய்வத்தைத் தான். பெண் தெய்வ வழிபாடு என்பது மிகச்சிறப்பானதாக இருந்து கொண்டு இருக்கிறது. உங்களுடைய ஜாதகத்தில் லக்னத்தில் சுக்ரன் இருந்தால், வெள்ளிக்கிழமை பிரம்ம முகூர்த்தத்திலோ அல்லது அதிகாலையில் 7 மணிக்கு உள்ளாக வோ ஏதாவது ஒரு பெண் தெய்வத்தின் கோயிலில் நெய் விளக்கு ஏற்றி பிரார்த்தனை பண்ணி விட்டு அதற்குப்பிறகு



உங்களுடைய வீட்டிற்கு வந்து காலை உணவு சாப்பிடக்கூடிய சிற்றுண்டி என்று சொல்லக் கூடிய டிபன் சாப்பிடுவது சிறப்பான ஒன்றாகும். என்ன தான் கோயிலுக்குப்போய், என்ன தான் நெய்விளக்கு ஏற்றி, என்ன தான் வழிபாடு வைத்து, என்ன தான் விரதம் இருந்து, என்னதான் அதிகாலை பிரார்த்தனை பண்ணினாலும், பெண்மையை உண்மையாக மதிக்கக்கூடிய ஒரு தன்மையை வளர்த்துக் கொண்டால், கண்டிப்பாக உங்களுடைய ஜாதகத்தில் லக்னத்தில் சுக்ரபகவான் இருந்தால், நீங்கள் நன்மையான வாழ்க்கையை வாழ முடியும் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகவே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுவாக சாஸ்திர ரீதியாக ஆண் தெய்வ வழிபாடு, காவல் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

நான் சொல்லக்கூடியது என்னவென்றால், உங்களுடைய ஜாதகத்தில் லக்னத்தில் குருபகவான் இருந்தார் என்றால் பெண் தெய்வ வழிபாடு என்பது, மிக மிக முக்கியம். ஆனால் பெண்மையை உண்மையாக மதிப்பது. அதைவிட முக்கியம் என்பதை இந்த நேரத்தில் ஆழமாக சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். எது எப்படி இருந்தாலும் ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்கிற ஆழமான விஷயத்தைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் கட்டுரையைப் படிக்கிற எல்லோருக்குமே குலதெய்வ ஆசையும் நவக்கிரக அனுக்கிரகமும் முழுமையாக கிடைக்க வேண்டும், ஈரேழு உலகத்தில் உள்ள எல்லா சக்தியின் ஒட்டு மொத்த ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு, வாழ்த்துகளுடன் உங்கள்.

**SRJ "ராஜயோகம்"**

**Dr. K.ராம் Ph.D., (USA)**

உ

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

**நீங்கள் எந்த தேதியில், ராசியில், நட்ஷத்திரத்தில், லக்கினத்தில் பிறந்தவராக இருந்தாலும்... ஏன்? எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்**

'நல்ல நேரமும்' நன்மையான காலமும்'ஜாதகத்தில் இருப்பது சத்தியமான உண்மை

உங்களுடைய ''ஜாதகம்'' ''கைரேகை'' ''பிறந்ததேதியை'' ஆய்வு செய்து பிரபஞ்சத்தில் உங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ''யோக பலன்களையும்'' ''பாவ புண்ணியங்களையும்'' ''பரிகார நன்மைகளையும்'' உறுதியாக தெரிந்துகொண்டு ''எண்கணித சாஸ்திரம்'' ''வாஸ்து சாஸ்திரம்'' ''தெய்வ பிரசன்ன சாஸ்திரம்'' ''விருட்ஷ சாஸ்திரம்'' ''மச்ச சாஸ்திரம்'' ''மந்த்ர'' ''தந்த்ர' சாஸ்திரம் ''சாமுத்ரிகா சாஸ்திரம்'' ''பஞ்சபூத சாஸ்திரம்'' ''பரிகார சாஸ்திரம்'' ''அதிர்ஷ்டரத்தின சாஸ்திரம்'' மற்றும் ''அஸ்ட்ரோ பயோரித சாஸ்திர'' விதிகளின்படி

## ''திக்கற்ற யாவரும்'' ''ஒப்பற்ற பயன்பற''

## "ராஜயோகம்" Dr. K.ராம் Ph.D., (USA)

''அண்ட நிழலும் இல்லை'' ''ஆதரிப்பார் யாரும் இல்லை''
என்ற நிலையில் ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனித உள்ளங்களை ஊக்கப்படுத்தி உண்மையான வாழ்வியலில்
''அவமானப்பட்ட'' ஒவ்வொரு மனிதனுக்கும் வெகுமானம் உண்டு!
என்ற ஆன்மீக உண்மையை மதங்களைக் கடந்து உலக நாடுகளில் உறுதிப்படுத்தி,
''சர்வமத ஜோதிட மகிரிஷி'' என்று பாராட்டும் பெற்றதோடு,
சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா உட்பட ஆஸ்திரேலியாவில் ''சிட்னி முருகர் கோவில்'' மற்றும் ''ஏடிபிசி வானொலி''-யில் சிறப்பு ஆன்மீக நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து (லண்டன்) உட்பட மேலை நாடுகளில் உள்ள நோய்களின் இக்கட்டான கேள்விகளுக்கு, அப்பட்டமான ஆன்மீக விளக்கங்கள் கொடுத்து, வெளிநாட்டு மக்களாலும், பத்திரிகைகளாலும், பாராட்டுப் பெற்றதோடு, ஜோதிடம், ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவைக்காக ''மனிதருள் மாணிக்கம்'' ''மகாத்மா காந்தி'' ''சாதனைச் சிகரம்'' ஆகிய விருதுகளும் பாராட்டுக்களும் பெற்றதோடு ''சாணத்திற்கும்'' ''மெஞ்ஞானத்திற்கும்'' உள்ள தாத்பர்யங்களை ''விஞ்ஞானத்தோடு'' விளக்கப்படுத்தி, ஆளுநர் அவர்களால் ''ஆன்மீகச் செம்மல்'' விருது பெற்ற



## SRJ "ராஜயோகம்"

## Dr. K.ராம் Ph.D., (USA)

**அவர்களை நேரில் சந்திக்க முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

NO: 139, PANNA PLAZA, ARCOT ROAD, KODAMBAKKAM, CHENNAI - 600 024, TAMIL NADU, INDIA.

OFFICE : 044 - 24849187
MOBILE :
9940431377, 9677276129,
9952991118, 9840160068
EMAIL : srjgem@gmail.com
WEB : www.srjgemsastronumero.com, www.drkramsrj.com.

SINGAPORE / MALAYSIA :
No: 250, BRICK FIELDS,
LITTLE INDIA ,
KUALA LUMPUR - 50470.
MOBILE : +91 9952991118

SRILANKA :
NO: 81, 1/5 MAHA,
VIDIYALAYA MAWATHA,
COLOMBO - 13.
OFFICE : +94112448303
MOBILE : +94772254163
+91 9952991118

AUSTRALIA :
NO: 65, HOMEBUSH ROAD,
STRATHFIELD SYDNEY,
AUSTRALIA - 2135.
MOBILE : +91 9952991118

LONDON :
NO: 163, STAINES ROAD,
MIDDLE SEX TWS 3JZ,
UNITED KINGDOM.
MOBILE : +91 9952991118

# நவராத்திரியில் நவ சக்திகள்!




சாகாவரம் வேண்டும் என்று பிரம்மனை நோக்கித் தவம் செய்த அசுரன் கேட்டதும் "படைக்கும் தொழிலில் அது சாத்தியமல்ல; பிறப்பவன் இறப்பதும், இறப்பவன் பிறப்பதும்தான் காலச் சக்கரத்தின் சுழற்சி. கேட்கும் வரத்தை மாற்றிக்கொள்" என்று பிரம்மா கூற. அசுரன் கர்வத்தால் தீர யோசிக்க மறந்தான். தேவர்களை வென்றுவிட்டால் எல்லோரும் தனக்கு அடிமையாகி விடுவார்கள் என்ற மமதையில் தனது சாவு ஒரு பெண்ணால்தான் ஏற்பட வேண்டும் என்று வேண்டினான். அசுரனை வதம் செய்ய அன்னை 9 அவதாரங்கள் எடுத்தாள். அதனைக் கொண்டாடுவதே நவராத்திரி. அன்னையை 9 நாள் வழிபடுவது நம் மரபு. எப்படி வழிபடுவது என இந்தக் கட்டுரையில் காண்போம்.

### முதலாம் நாள்:

சக்தித்தாயை முதல்நாளில் சாமுண்டியாக கருதி வழிபடவேண்டும். தெத்துப்பல் திருவாயும், முண்டமாலையும் அணிந்தவள். முண்டன் என்ற அசுரனை சம்ஹாரம் செய்த சக்தி அவள். இதனால் சாமுண்டா எனவும் இவள் மிகவும் கோபக்காரி. நீதியைக்காக்கவே இவள் கோபமாக இருக்கிறாள் என்பது ஐதீகம்.

### இரண்டாம் நாள்:

இரண்டாம் நாளில் அன்னையை வராஹி தேவியாக கருதி வழிபட வேண்டும். வராஹ(பன்றி) முகமும் தெத்துபற்களும் உடையவள். சூலமும் உலக்கையும் ஆயுதங்கள் ஆகும். பெரிய சக்கரத்தை தாங்கியிருப்பவள்.

தனது தெத்து பற்களால் பூமியை தூக்கியிருப்பவள். இவளிற்கு மங்கள மய நாராயணி, தண்டினி, பகளாமுகி போன்ற திருநாமங்களும் உண்டு. இவள் அன்னையின் சேனாதிபதி ஆவாள்.



### மூன்றாம் நாள்:

மூன்றாம் நாளில் சக்தித்தாயை இந்திராணியாக வழிபடவேண்டும். இவளை மாஹேந்தரி, சாம்ராஜ தாயினி என்றும் அழைப்பர். இவள் இந்திரனின் சக்தி ஆவாள். கிரீடம் தரித்து வஜ்ராயுதம் ஏந்தியவள். ஆயிரம் கண்ணுடையவள். யானை வாகனம் கொண்டவள். விருத்திராசுரனை அழித்தவள். தேவலோகத்தை பரிபாலனம் செயபவளும் இவளேயாகும். பெரிய பெரிய பதவிகளை அடையவிரும்புபவர்களிற்கு இவளின் அருட்பார்வை வேண்டும்.

### நான்காம் நாள்:

சக்தித்தாயை அன்று வைஷ்ணவி தேவியாக வழிபடவேண்டும். சங்கு, சக்கரம், கதை, வில் ஆகியவற்றை கொண்டிருப்பவள். தீயவற்றை சம்ஹரிப்பவள். இவளின் வாகனம் கருடன்.

### ஐந்தாம் நாள்:

ஐந்தாம் நாளில் அன்னையை மகேஸ்வரி தேவியாக வழிபட வேண்டும். அன்னை மகேஸ்வரனின் சக்தியாவாள்.திரிசூலம், பிறைச்சந்திரன், பாம்பு தரித்து இடப வாகனத்தில் எழுந்தருளி யிருப்பவள். அளக்கமுடியாத பெரும் சரீரம் உடையவள். சர்வ மங்களம் தருபவள். தர்மத்தின் திருவுருவம். கடின உழைப்பாளிகள் உழைப்பின் முழுப்பலனை பெற அன்னையின் அருள் அவசியம் வேண்டும்.

### ஆறாம் நாள்:

அன்று அன்னையை கவுமாரி தேவியாக வழிபடவேண்டும். மயில் வாகனமும் சேவல் கொடியும் உடையவள். தேவசேனாதிபதியான முருகனின் வீரத்திற்கு ஆதாரமானவள். ஓங்கார சொரூபமானவள். சகல பாவங்களையும் விலக்கிடுபவள். வீரத்தை தருபவள்.

### ஏழாம் நாள்:

ஏழாம்நாள் அன்னையை மகாலட்சுமியாக வழிபடவேண்டும். கையில் ஜெபமாலை, கோடரி, கதை, அம்பு வில், கத்தி, கேடயம், சூலம், பாசம், தண்டாயுதம், சக்தி ஆயுதம், வஜ்ராயுதம், சங்கு, சக்கரம், மணி, மதுக்கலயம், தாமரை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். பவளம் போன்ற சிவந்த நிறத்தையுடையவள். தாமரை ஆசனத்தில் அமர்ந்து சகல ஐஸ்வரியங்களையும் தருபவள் அன்னையாகும்.

### எட்டாம் நாள்:

அன்று அன்னையை நரசிம்ஹி ஆக வழிபடவேண்டும். மனித உடலும், சிம்ம தலையும் உடையவள். கூரிய நகங்களுடன் சங்கு, சக்கர தாரிணியாக சிம்ம வாகனத்தில் காட்சி தருபவள். சத்ருக்கள் தொல்லையில் இருந்து விடுபட அன்னையின் அருள்வேண்டும்.

### ஒன்பதாம் நாள்:

அன்று அன்னையை ப்ராஹ்மி ஆக வழிபடவேண்டும். அன்ன வாகனத்தில் இருப்பவள். வாக்கிற்கு அதிபதியாவாள். ஞானசொரூபமானவள். கல்விச்செல்வம் பெற அன்னையின் அருள் அவசியமாகும். இவ்வாறாக அன்னையை 9 நாட்களும் வழிபடுவதன் மூலம் அவளருள் பெறலாம்.

**– மல்லிகா**

ஒன்பது நாள்கள் அம்பாளை நினைத்து மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படக்கூடிய பண்டிகைதான் இந்த நவராத்திரி. அம்பாளை நினைத்து வழிபடும் பண்டிகை என்பதால், இந்த வழிபாடானது முழுக்க முழுக்க பெண்களுக்கே உரிய ஒரு பண்டிகை என்றுகூட சொல்லலாம். சிவனுக்கு ஒரு ராத்திரி அது ‘சிவராத்திரி’. அம்பாளுக்காகக் கொண்டாடப்படும் ராத்திரி நவராத்திரி என்று சொல்லுவார்கள்.



# நவராத்திரி கொலு

உங்கள் வீட்டில் கொலு வைக்கும் வழக்கம் இருந்தால், அந்த முறைப்படி கொலு வைத்து, நவராத்திரி பூஜையை தொடங்கலாம். வீட்டில் கொலு வைக்கும் பழக்கம் இல்லை என்ற போதிலும், ஆசை இருக்கும் பட்சத்தில், வீட்டிலிருப்பவர்கள் சம்மதத்தோடு கொலு வைக்கலாம்.

கொலுவை வீட்டில் ஆரம்பிப்பதற்கு முன்பாக, அம்பாளை நினைத்து மனதார வேண்டிக்கொண்டு, ‘எங்கள் வீட்டில் கொலு வைக்கும் பழக்கம் இல்லை. இருப்பினும் கொலு வைத்து வழிபடுவதற்கு அருளாசியை வழங்க வேண்டும்’ என்று மனதார பிரார்த்தனை செய்து கொண்டு அதன் பின்பு கொலு வைக்கலாம்.

நவராத்திரியின் முதல் 3 நாள்கள் மலைமகளின் அம்சமான துர்கை அம்மனுக்கு உரியது. முதல் நாள் மகேஸ்வரி அம்மனை நினைத்துதான் நவராத்திரியைத் தொடங்க வேண்டும். வீட்டு வாசற்படியில் புள்ளி வைத்து, கம்பிக் கோலம்

போட வேண்டும் என்பது குறிப்பிடத் தக்க ஒன்று. மாலையில் அம்மனுக்கு மல்லிகைப்பூ, வில்வ இலையால் அலங்காரம் செய்து விட்டு, தீபம் ஏற்றி, வெண்பொங்கலை நைவேத்தியமாகப் படைத்து, வழிபாடு செய்ய வேண்டும். முடிந்தால் அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், உறவினர்களை வீட்டிற்கு அழைத்து, தாம்பூ லத்தை தானமாக கொடுப்பது சிறப்பினைத் தேடித்தரும். குறிப்பாக முதல் நாளில் பச்சை நிறம் மிகவும் உகந்ததாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கும், கன்னிப் பெண்களுக்கும், பச்சை



நிறத்தில் வளையல் அல்லது பச்சை நிற ரவிக்கை துணி இப்படிப்பட்ட பொருள்களை தாம்பூலத்தில் வைத்துக் கொடுப்பது மேலும் சிறப்பினைத் தேடித்தரும். இதனோடு அம்மனுக்கு படைத்த வெண்பொங்கலையும் கொடுக்க வேண்டும். வளையல், ரவிக்கைத்துணி என்று எதையுமே தானமாக கொடுக்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. வீட்டில் வருபவர்களுக்கு வெற்றிலை பாக்கு, பூ, நெற்றியில் இட்டுக்கொள்ளக் குங்குமம் மட்டும் கொடுத்தால் கூடப்போதும். இந்த வகையில் முதல் நாள் வழிபாட்டை நிறைவாகச் செய்து முடித்தால், வீட்டில் இருக்கும் கஷ்டங்கள் நீங்கும். வறுமை இல்லாத, செல்வ செழிப்பான வாழ்க் கையை வாழ்வதற்கு வழி பிறக்கும்.

– கோமதி


**அருள் ராஜயோகம், ஆன்மீகம் ஜோதிட மருத்துவ மாத இதழ்**
**புது எண் 139, பழைய 7, பண்ணா பிளசா, ஆற்காடு ரோடு**
**கோடம்பாக்கம், சென்னை–600 024**

அன்புடையீர்,

அருள் ராஜயோகம் மாதஇதழுக்கு ஆயுள் சந்தா ரூ. 5000/– செலுத்த விரும்புகிறேன். மாதா மாதம் இதழ்களை அனுப்பி வைக்கவும். நன்றி!

பெயர் ; ______________________

முகவரி ; ______________________

______________________

______________________

பணம் செலுத்தும் விவரம் (டிக் செய்து விபரங்களை குறிப்பிடவும்)

☐ பணவிடை ____________ ☐ காசோலை ____________

☐ கேட்போலை ____________ ☐ ரொக்கம் ____________

# சந்தாப் படிவம்

சந்தாதாரர் கையொப்பம்



# கொலு ஐதீகம்!

பெண் என்றால் பலவீனத்தின் சின்னம் என நினைத்த மகிஷன், சக்தியின் மகிமையை அறியவில்லை. தனக்கு பெண்ணால் தான் மரணம் என்கிற வரம் கிடைத்தவுடன், தன்னை யாரும் அழிக்க முடியாது என்கிற ஆணவத்தில், மகிஷனின் அட்டகாசம் மூவுலகிலும் தலை தூக்கியது. தர்மம் அழிந்தது.

'தனது நெற்றிக் கண்ணைத் திறந்து அதிலிருந்து வெளிப்பட்ட நெருப்புப் பொறியிலிருந்து சர்வ சக்தியாம் துர்க்கையைத் தோற்றுவித்தார் பரமேஸ்வரன்.'

கள் அவல நிலைக்கு ஆளாகி துன்புற்றனர். வர்களும் ஈசனை வேண்டினர். தனது நெற்றிக் கண்ணைத் திறந்து அதிலிருந்து வெளிப்பட்ட நெருப்புப் பொறியிலிருந்து சர்வ சக்தியாம் துர்க்கையைத் தோற்றுவித்தார் பரமேஸ்வரன்.

சிம்ம வாகனத்தில் ஆயிரம் ஆயுதங்களை ஏந்தி சாமுண்டியாகப் புறப்பட்டாள் ஆதிசக்தி. ஒன்பது நாட்கள் அசுரனுடன் போரிட்டு பத்தாம் நாளில் எருமை வடிவிலிருந்த மகிஷனை துவம்சம் செய்தாள் பராசக்தி. அதர்மம் அழிந்ததைக் கண்ட தேவர்கள் தேவிக்கு மலர் மாரி பொழிந்தனர். எல்லோருடைய பயங்களையும் போக்கி அபயம் தந்து அசுரர்களை அழித்து ஜெயத்தை அடைந்த அம்பிகை அவதரித்தது இந்த நவராத்திரி ஆரம்ப நாளில்தான்.



சக்தியாக தோன்றிய அம்பாள் அசுரர்களை அழித்துவிட்டு சிவனுடன் ஐக்கியமாகி சிவசக்தி சொரூபிணியாகக் காட்சி அளித்தது விஜயதசமி அன்றுதான்.எனவேதான் நவராத்திரி பண்டிகையை 9 நாட்கள் கொண்டாடுகிறோம். அசுரர்களை அழிக்க அன்னை பராசக்தி அவதரித்ததும், தேவர்கள் அனைவரும் தங்களுடைய ஆயுதங்களைத் தேவியிடம் ஒப்படைத்து விட்டனர். அம்பாளான பராசக்தி அசுரர்களுடன் சண்டையிட்ட பொழுது தேவர்கள் பொம்மை மாதிரி நின்று கொண்டிருந்ததைக் காட்டத்தான் பொம்மை கொலு வைப்பதாக ஐதீகம்.

– கோமதி

# நவராத்திரி என்றால் என்ன?



நவராத்திரி என்பது இந்துக்களின் வழிபாடு மற்றும் நடன விழாவாகும். நவராத்திரி என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் ஒன்பது இரவுகள் என்று பொருள்; நவ என்றால் ஒன்பது என்றும், ராத்திரி என்றால் இரவுகள் என்றும் பொருள். இந்த ஒன்பது இரவுகள் மற்றும் பத்து நாட்களில், ஒன்பது வகையான சக்தி/தேவி அதாவது பெண் தெய்வம் வழிபடப்படுகிறது. ஒன்பது இரவு நவராத்திரி விழா, பிரகாசமான பதினைந்து நாட்களின் அஸ்வின மாதத்தின் முதல் நாளில் தொடங்குகிறது. இந்த விழா , விஜயதசமி அல்லது தசரா பத்தாம் நாளில் முடிவடைகிறது , அப்போது சக்தி தேவியின் சிலைகள் ஆற்றில் மூழ்கும். 'பத்து நாட்கள்' என்று பொருள்படும் தசரா, பிரபலமான பேச்சுவழக்கில் தசராவாக மாறுகிறது. நவராத்திரி விழா அல்லது 'ஒன்பது நாள் விழா', கடைசி நாளான விஜயதசமியுடன் சேர்ந்து 'பத்து நாள் விழா'வாக மாறுகிறது, இது அதன் உச்சக்கட்டமாகும். இந்த பத்து நாட்களிலும், அன்னை மகிசாசுரமர்த்தினியின் (துர்க்கை) பல்வேறு வடிவங்கள் உற்சாகத்துடனும் பக்தியுடனும் வழிபடப்படுகின்றன. நவராத்திரியின் அடுத்த மூன்று நாட்கள் செல்வம் மற்றும் செழிப்பின் தெய்வமான லட்சுமி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இறுதி மூன்று நாட்கள் ஆன்மீக அறிவைப் பெறுவதற்காக வணங்கப்படும் சரஸ்வதி தேவிக்கு சொந்தமானது. நவராத்திரியின் ஒன்பது நாட்களும் துர்கா தேவி ஒன்பது வெவ்வேறு பெயர்களில் வழிபடப்படுகிறார். ஒவ்வொரு நாளும், அவள் ஒரு புதிய தன்மை, ஒரு புதிய தோற்றம் மற்றும் ஒரு புதிய கடமையை ஏற்றுக்கொள்கிறாள். இந்த ஒன்பது வடிவ வெளிப்பாடுகள் சைலபுத்ரி, பிரம்மச்சார்த்தினி, சந்திரகாந்தா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயனி, காலராத்ரி, மகாகௌரி மற்றும் சித்திதாத்ரி . ஆரம்ப ஆறு நாட்களுக்கு பூஜை கொண்டாட்டங்கள் வீட்டிற்குள் மட்டுமே. நவராத்திரியின் பண்டிகைகள் வளிமண்டலத்தைச் சூழ்ந்த ஏழாம் நாளிலிருந்து கொண்டாட்டங்கள் ஒரு பண்டிகை வடிவத்தைப் பெறுகின்றன. நவராத்திரி மூன்று நாட்களின் தொகுப்பாகப் பிரிக்கப்பட்டு, உச்ச தேவி அல்லது தெய்வங்களின் மூன்று வெவ்வேறு அம்சங்களை வணங்கப்படுகிறது.

– பார்வதி



# நவக்கிரக தோஷம் விலக செய்யுங்க நவராத்திரி வழிபாடு!

**குடும்பத்தில் துஷ்ட சக்தி அகன்று நல்ல சக்தி சூழ வேண்டும் என்றால் வீட்டில் கடவுளின் வழிபாடு நிச்சயம் தேவை. அதற்கு ஒட்டுமொத்த பூஜை என்பது நவராத்திரி ஆகும். நமக்கு ஒரு காரியம் நடக்க தந்தையை விட தாயிடம் கேட்பது வழக்கம். அதுபோல் நமக்கு வேண்டியதை நம் தாய் பரமேஸ்வரி மற்றும் அவளின் அவதாரங்களில் உள்ள நம் இஷ்ட தெய்வத்திடம் கேட்கும் பொழுது கட்டாயம் நமக்குக் கிட்டும்.**

நவ + ராத்திரி. இதில் நவ என்றால் 9 ஆகும். ஒன்பது முக்கிய சக்தி கொண்ட செவ்வாயின் ஆதிக்கம் பெற்ற எண். இந்த எண் ஜாதகத்தில் நவக்கிரகங்களை, நவராத்திரி, நவ பாஷாணக் கட்டு, குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் 9 மாதகள், நவரசத்தை, நவ சக்தியை அடங்கிய நவ துர்க்கை, நவரத்தினம், நவ கன்னிகை உடலில் உள்ள நவ துவாரங்கள் (ஓட்டைகள்) என்று அடுக்கிக்கொண்டு போகலாம். இவற்றில் நவராத்திரி வரலாறு மற்றும் அவற்றின் பெருமை பற்றிச் சிறு தொகுப்பைப் பார்ப்போம். நவராத்திரி என்றவுடன் அனைவருக்கும் முக்கியமாகக் குழந்தைகளுக்கும் மற்றும் பெண்களுக்கும் மகிழ்ச்சிகரமான திருவிழாவாகும். வீட்டில் மாக்கோலம் இட்டு, தோரணம் கட்டி வீடே கலகலப்பாக மங்கள கடாட்சமாக இருக்கும். நம் தாத்தா பாட்டி காலத்தில் ஏழை பணக்காரன் பாகுபாடின்றி, யாரும் அழைக்காமல் அனைவரின் வீட்டுக்கும் சென்று தாம்பூலம் வாங்கி வருவோம். தங்கள் வீடு தேடி வருபவர்களை லக்ஷ்மியாகவும், துர்கையாகவோ, சரஸ்வதியாகவோ மற்றும் அம்பாளின் அவதாரமாகவும் நினைத்து இன்புற்று வரவேற்பார்கள். பொருளாதார மற்றும் அவரவர் நிலைகளுக்கு ஏற்ப இக்காலங்களில் கொலு அழைப்பு என்பது கொஞ்சம் குறைவுதான். தற்காலத்தில் நம்மை யாராவது கூப்பிட்டால் தான் போக வேண்டும் என்று இருப்போம். இன்றும் எனக்குத் தெரிந்த சிலர் வீட்டில் பழங்கால முறைப்படி நவராத்திரி பத்து நாட்களும் யாராவது மங்கை மற்றும் சிறுகுழந்தைகள் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு உணவு மற்றும் தாம்பூலம் கொடுத்து சந்தோஷமாக அனுப்பிவைக்கிறார்கள்.

நவராத்திரி என்பது வருடத்தில் ஒன்று மட்டும் என்று நினைத்திருக்கிறோம். ஆனால் மொத்தம் ஒரு வருடத்திற்கு நான்கு நவராத்திரி வழிபாடு இந்தியாவின்

பல மாநிலங்களில் கோவில்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படுகிறது. அவை அனைத்துமே ஒன்பது நாட்கள் சிறப்பு வழிபாடு கொண்டது. அவை ஆஷாட நவராத்திரி, சாரதா நவராத்திரி, சியாமளா நவராத்திரி, வசந்த நவராத்திரிகள் ஆகும். ஆனி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் ஆஷாட நவராத்திரி ஆகும். இந்த நவராத்திரியின் தெய்வம் ஸ்ரீ வாராஹி தேவி. இவள் நம் உடலில் இருக்கும் ஆறு ஆதார சக்கரத்தில் நெற்றியில் விளங்கும் ஆக்ஞா சக்கரத்திற்கு உரியவள். அவளை நினைத்து உலக வளமைக்காகவும், தானியங்கள் செழிக்கவும், செல்வங்கள் பெருகவும், எதிர்ப்புகள் அகலவும் அம்பிகையை வழிபாடு செய்வார்கள்.

மொத்தம் ஒரு வருடத்திற்கு நான்கு நவராத்திரி வழிபாடு இந்தியாவின் பல மாநிலங்களில் கோவில்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படுகிறது. அவை அனைத்துமே ஒன்பது நாட்கள் சிறப்பு வழிபாடு கொண்டது. அவை ஆஷாட நவராத்திரி, சாரதா நவராத்திரி, சியாமளா நவராத்திரி, வசந்த நவராத்திரிகள் ஆகும்.

இன்றும் தஞ்சையில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.தை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் பிரதமை முதல் வரும் ஒன்பது நாட்கள் சியாமளா நவராத்திரி அடக்கும். மதங்க முனிவரின் தவப்புதல்வியாக அவதரித்தருளியவள் ஞான வடிவானவள் அன்னை ஸ்ரீ ராஜமாதங்கி என்னும் ஸ்ரீ சியாமளா தேவி தான் இந்த நவராத்திரிக்கு முக்கிய கடவுள். இந்த தாயினை வணங்கினால் கல்வி, இசை, இலக்கியம், நடனம் மற்றும் சகலகலைகளும் நமக்குக் கிட்டும். பங்குனி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஸ்ரீ ராம நவமியுடன் முடியும் வரை இந்த ஒன்பது நாட்கள் வசந்த நவராத்திரி என்னும் வழிபாடு நடைபெறும்.

வசந்த நவராத்திரி 9 நாட்கள் கொண்டாடினால் உலகம் க்ஷேமம் என்றும் 15 நாட்கள் (அமாவாசை பௌர்ணமி வரை) கொண்டாடினால்



வேண்டிய வரங்கள் கிட்டும் என்று புராணம் கூறப்படுகிறது. இந்த மாதங்களிலும் நல் வாழ்வையும் அளித்து, நோய் எதிர்ப்பு சக்தி பெற்று, ஆன்மீக சக்தியுடன் கூடிய நீண்ட நல்வாழ்வு வாழ அருளக் கூடியவள் அம்பிகை மட்டுமே. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் நவமி முடியும் வரை ஒன்பது நாட்கள் சாரதா நவராத்திரி என்றும் வட நாட்டில் துர்கா பூஜையாகவும் கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில் காலையில் சிவ மற்றும் விஷ்ணு வழிபாடும் மாலையில் அம்பிகைகளான 18 கைகளை உடைய துர்கா, சரஸ்வதி, லட்சுமி மற்றும் அம்பாளின் அவதாரங்களை வழிபட்டால் வீட்டில் நோய் வராமல் காக்கப்படும், குழந்தைகளுக்குக் கல்வி செல்வம் கிட்டும், கேட்டது கிடைக்கும், எதிலும் வெற்றிவாகை சூட்டலாம், ஒன்பது கிரக தோஷங்கள் நீங்கும், எதிர்மறையான விளைவுகள் மற்றும் கெட்ட சக்திகள் எதுவும் அண்டாது. கோள்க ளால் வரக்கூடிய துன்பங் களைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது இந்த பூஜை. இதனால் வீட்டில் நேர்மறை ஆற்றல் ஏற்படும்.

இந்த கொலுப்படி தத்துவப்படி உலகம் என்பது மாயை அவற்றில் நாம் புழுவாய் பிறந்து, மரமாகவும் பிறந்து, மனிதராகவும் பிறந்து, கடைசியில் முக்தி என்ற மோட்சத்தை அடைய போராடுகிறோம் என்பது நவராத்திரி முக்கிய அம்சம் ஒன்பது சக்திகள் என்பது முப்பெரும் சக்திகளில், ஒவ்வொரு சக்திக்கும் மும்மூன்று அம்சங்கள் கொண்டவர்கள். அவர்களை முதல் மூன்று நாட்கள் துர்க்கையின் வழிபாடு, இடை மூன்று நாட்கள் லட்சுமி வழிபாடு மற்றும் கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி வழிபாடு செய்யப்படும்.

இவர்களை வெவ்வேறு அவதாரத்தில் அதாவது துர்க்கை என்பவள் மகேஸ்வரி, கௌமாரி, வராகி, நவதுர்கை என்றும் லட்சுமி என்பவள் மகாலெட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி, அஷ்ட லக்ஷ்மி என்றும் மற்றும் சரஸ்வதி என்பவள் நாரசிம்மி, சாமுண்டியாகவும் மண் பொம்மை உருவங்களை வைத்து வழிபட்டால் அனைத்து கிரக தோஷமும் அகலும் மற்றும் குடும்பம் மகிழ்ச்சியில் மிதக்கும்.தங்களுக்குத் தெரிந்த ஸ்லோகங்கள், விநாயகர் துதி, சௌந்தர்ய லஹரி, அபிராமி அந்தாதி, துர்க்காஷ்டகமும், லட்சுமி அஷ்டோத்திரமும், சரஸ்வதி அஷ்டோத்திரம், லலிதா சகஸ்ரநாமம் அர்ச்சனை செய்து நவக்கிரக நாயகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் நவதானியச் சுண்டல் மற்றும் பழங்கள் வைத்து பூஜை செய்யலாம்.

தங்களால் முடிந்ததை ஏழை குழந்தைகளுக்கு என்றும் மற்றும் பெண்களுக்கு தேவையானவற்றை வாங்கி தாம்பூலத்தில் வைத்து ஒன்பது நாலும் கொடுக்கலாம். நாம் எவ்வளவு இல்லாதவர்களுக்கு கொடுக்கிறோமோ அதற்கு நூறு மடங்கு பகவான் திருப்பி தந்து விடுவான். இந்த முறையை செய்துதான் பாருங்களேன்.

– ஜனனி



சித்த மருத்துவம்

# மருத்துவ குணங்கள் பல நிறைந்த கறிவேப்பிலை!

சமையல் செய்யும் போது, கறிவேப்பிலையை உணவின் சுவைக்காகவும், வாசனைக் காகவும் தான் போடுகிறோம் என நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் கறிவேப்பிலை உணவின் சுவையை கூட்டுவதோடு மட்டுமல்லாமல்.. நமது உடலின் ஆரோக்கியத்தையும் கூடுவதாக சமீபத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. கறிவேப்பிலையின் பல்வேறு மருத்துவ குணங்கள் பற்றி இப்போது விரிவாக காண்போம். முடி கொட்டுவதைத் தவிர்க்க, செரியாமையைப் போக்க, அமீபியாசிஸ் எனப்படும் ஒரு வகை வயிற்றுப்போக்கைக் குணப்படுத்த, வயோதிகத்தில் வரும் 'அல்சைமர்' எனும் ஞாபக மறதியைக் குறைக்க எனப் பல பிரச்னைகளுக்கும் தீர்வாக இருக்கிறதாம் கறிவேப்பிலை. இந்திய சமையலில் வாசனைக்குச் சேர்க்கப்படும் கறிவேப்பிலை, பெருங்குடல் புற்றுநோயைத் தடுக்கும் தன்மை உடையது என என்பதை ஆஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். கறிவேப்பிலை ரத்த சர்க்கரை அளவை 42 சதவிகிதமும், ரத்தக் கொழுப்பை 30 சதவிகிதமும் குறைக்கிறது என்கிறது சமீபத்திய ஆய்வு.

சிறு வயதிலேயே இளநரை ஏற்பட்டால், கறிவேப்பிலையோடு சின்ன வெங்காயம் சேர்த்து அரைத்து சாப்பிடச் சொல்வார்கள் நம் தாத்தா பாட்டியினர். பித்தம் கூடினாலோ, ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைந்தாலோ, இளநரை உருவாகும். முடியின் கறுமை நிறத்துக்குத் தேவை இரும் புச் சத்து. கறிவேப் பிலை யில் இரும்புச் சத்து அதிகம். சின்ன வெங்காயம் ரத்தத்தைச் சுத்திகரித்து, பித்தத்தைக் குறைக்கும். இதனால் இளநரை குறைந்து முடிகள் கறுப்பாகும். முடி வளர்ச்சிக்குப் புரதமும் இரும்புச் சத்தும் தேவை.



50 கிராம் உளுந்துடன், 25 கிராம் கறிவேப்பிலையைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டு வர நல்ல முடி வளர்ச்சி கிடைக்கும். கறிவேப்பிலையில் உள்ள கார்பஸோல் ஆல்கலாய்டுகள் கருமுட்டை உற்பத்தியைத் தூண்டு கின்றன. 20 கிராம் கறிவேப் பிலையுடன் மூன்று கிராம் சீரகம், ஒரு கிராம் வெந்தயம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். காலையில் வெறும் வயிற்றில் மோர் அல்லது பாலில் இந்தக் கலவையைக் கலந்து குடித்துவந்தால், பித்தச் சூடு மற்றும் கருப்பைச் சூடு நிவர்த்தி ஆகும். சாதாரணமாக 100 கிராம் கறிவேப்பிலையை அரைத்து சாற்றை எடுத்து 100 கிராம் தேங்காய் எண்ணையில் கலந்து இதமான சூட்டில் ஈரப்பதம் நீங்கும் வரை காய்ச்சி தினசரி தேய்த்து வந்தால் உடல் உஷ்ணம் மங்கும். இதுதவிர நீரிழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலை இலையையும், மாலையில் 10 இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டு மென்று சாற்றை விழுங்கி வந்தால் மாத்திரை சாப்பிடும் அளவை பாதியாக குறைத்து விடலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

-யூகிதன்

# உங்கள் ஆதித்யா TV யில்



★ 27 நட்சத்திரங்களை உள்ளடக்கிய 12 ராசிகளில் உங்கள் ராசிக்கான தின பலன்

★ வழிபட வேண்டிய தெய்வம்

★ ஆன்மீக தகவல்

## யோகம் ராஜயோகம் நிகழ்ச்சியில்

**தினந்தோறும் காலை 7.00 மணிக்கு காணத்தவறாதீர்கள்**

# ராஜயோகம்

# ஆன்மீக அறக்கட்டளை...!

(GOVT REGD : 58/99 - 22 23)





கல்வி, மருத்துவம்,
கலாச்சரம், பண்பாடு,
உணவு, விளையாட்டு,
ஒழுக்கம் சார்ந்த
உதவிகள் மற்றும்
இந்துமத சாஸ்திர,
சம்பிரதாய ஆன்மீக
விழிப்புணர்வு
வழங்குதல்.

உதவும் உள்ளங்கள்
தொடர்பு கொள்ள
814 814 88 44 /
814 814 82 92
website:
www.rajayogamtrust.com

# ராஜயோகம் நிகழ்ச்சிகள்









# குலதெய்வ விருட்ஷம்

ஒன்பது கிரகங்கள், 12 ராசிகள்,
12 லக்கினங்கள், 15 திதிகள்,
27 நட்ஷத்திரங்கள், 27 பட்ஷிகள்,
27 விருட்ஷங்களுக்கான
சூட்சுமக் குறியிடுகளோடு
தெய்வப்பிரசன்ன
சாஸ்திரப்படி உருவாக்கப்பட்ட
"குலதெய்வ விருட்ஷம் "



"ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)



*( height : 15 cms*
*width : 17 cms*
*weight : 489g )*

குடும்ப ஒற்றுமை,
குபேர சம்பத்து,
காரிய வெற்றி, சத்ரு ஜெயம்,
நோய், கடன்,
திருமண தடைகள் விலகி,
பதினாறு செல்வங்கள்
கிடைப்பதற்க்காக
48 வகையான பூஜைகளால்
பூஜிக்கப்பட்ட ...

## "குலதெய்வ விருட்ஷம்"

## இது பொருள் அல்ல
## "குலதெய்வ அருள்"

**Order Now**
**99404 31377 / 99529 91118**
**website: www.kuladeivavirutcham.com**



# கிழக்கு நோக்கிய வீட்டிற்கு எந்த ராசி பொருத்தமானது?

ஒரு வீட்டின் சீரமைப்பானது, சில ராசிகள் அல்லது சூரிய ராசிகளுடன் அமைந்திருப்பது, அதில் வசிப்பவர்களின் ஆற்றலையும் செழிப்பையும் பெரிதும் பாதிக்கும். நீங்கள் கிழக்கு நோக்கிய வீட்டை வைத்திருந்தாலோ அல்லது அதை வாங்க திட்டமிட்டிருந்தாலோ, வாழ்க்கை இடத்திற்குள் நேர்மறை ஓட்டத்தை அதிகரிக்க உங்கள் ராசியை கருத்தில் கொள்ள வேண்டும். கிழக்கு நோக்கிய வீட்டிற்கு எந்த ராசி நல்லது மற்றும் இணக்கமான வாழ்க்கைக்கு பங்களிக்கும் பிற ஜோதிடக் கொள்கைகளைப் புரிந்துகொள்ள தொடர்ந்து படியுங்கள்.

வாஸ்து சாஸ்திரம் மற்றும் ராஷியைப் புரிந்துகொள்வது வாஸ்து சாஸ்திரம் என்பது ஒரு பண்டைய இந்திய கட்டிடக்கலை அறிவியல் ஆகும், இது கட்டமைப்புகளை அண்ட சக்திகளுடன் சீரமைப்பதன் மூலம் சமநிலையான மற்றும் அமைதியான வாழ்க்கைக்கான கொள்கைகளை பரிந்துரைக்கிறது. இது முதன்மையாக இடங்கள் மற்றும் திசைகளின் ஏற்பாட்டில் கவனம் செலுத்துகிறது, ஒவ்வொன்றையும் உங்கள் வாழ்க்கையின் குறிப்பிட்ட அம்சங்களுடன் இணைக்கிறது. வாஸ்து சாஸ்திரத்தின் அடித்தளத்தை உருவாக்கும் கூறுகள் பின்வருமாறு:

•பூமி (பிருத்வி) •தண்ணீர் (ஜல்) •நெருப்பு (அக்னி) •காற்று (வாயு) •விண்வெளி (ஆகாஷ்)

ஒருவரின் ராசி, வாஸ்துவில் முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, ஒருவரின் ராசி, அவர்களின் வாழ்க்கை இடத்துடன் எவ்வளவு ஒத்துப்போகிறது என்பது அவர்களின் நல்வாழ்வு மற்றும் செழிப்பை பெருமளவில் பாதிக்கும் என்று கூறப்படுகிறது. இதனால்தான் தனிநபர்கள் தங்கள் ராசியுடன் நேர்மறையாக ஒத்திருக்கும் வீடுகளை உருவாக்க வாஸ்து வழிகாட்டுதலை நாடுகிறார்கள்.

கிழக்கு நோக்கிய வீடுகளுடன் ராசி பொருத்தம்: கிழக்கு நோக்கிய வீடு சூரிய உதயத்துடன் தொடர்புடையது. இது உயிர்ச்சக்தி மற்றும் புதிய தொடக்கங்களையும் குறிக்கிறது. அத்தகைய வாழ்க்கை இடத்தில் நல்லிணக்கத்தை மேம்படுத்த, கிழக்கு நோக்கிய திசையுடன் பொருந்தக்கூடிய ராசிகளுடன் அதை நீங்கள் சீரமைக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் மேஷம் (மேஷம்) அல்லது மிதுனம் (மிதுனம்) ராசியில் பிறந்திருந்தால், அத்தகைய நோக்குநிலைகளிலிருந்து நீங்கள் பயனடையலாம், ஏனெனில் இந்த ராசிகள் மாறும் ஆற்றல் மற்றும் தகவமைப்புத் திறனுடன் தொடர்புடையவை.

இது ஒரு உதாரணம் மட்டுமே என்றாலும், ராசி பொருத்தம் குறித்த தனிப்பட்ட வழிகாட்டுதலுக்கு வாஸ்து நிபுணர்களை அணுகுவது சிறந்தது. சிம்ம ராசி அல்லது வேறு எந்த ராசிக்கு எந்த வீடு நல்லது என்பதை நீங்கள் அறிய விரும்பலாம், இதற்கு நிபுணர் ஆலோசனை மூலம் பதிலளிக்க முடியும்.

–கனகா

# செப்டம்பர் 2025 - ராசி

## மேஷம்



**அன்பும், அரவணைப்பும் அதிகாரமும் அமையப் பெற்ற மேஷ ராசி பாக்கியவான் களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்..**

மேஷ ராசிக்காரர்களுக்கு பலனளிக்கும். இந்த மாதம் நீங்கள் வெளிநாடு செல்வதில் வெற்றி பெறலாம். ஆனால் உங்கள் செலவுகள் மிக அதிகமாக இருக்கும் மற்றும் உடல்நலக் கண்ணோட்டத்தில் கூட பிரச்சனைகள் இருக்கும். உடல்நலக் கோளாறுகள் உண்டாகலாம் மற்றும் செலவுகளும் உயரும். காதல் உறவுகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதற்கான வலுவான வாய்ப்பு உள்ளது. திருமணமானவர்களுக்கு நேரம் ஓரளவு சாதகமாக இருக்கும். இந்த மாதம் புனித யாத்திரை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். வியாபாரம் செய்பவர்கள் சற்று கவனமாக இருக்க வேண்டும். ஆறாம் மற்றும் பன்னிரண்டாம் வீட்டில் கிரகங்களின் தாக்கம் அதிகமாக இருப்பதால், வியாபாரம் தொடர்பாக அதிக செலவுகள் ஏற்படும். குடும்ப வாழ்க்கைக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும்.

**பரிகாரம்: உங்கள் ராசி அதிபதியான செவ்வாய் பகவானின் பீஜ் மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.**

## ரிஷபம்



